மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை—திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள், திங்கட்கிழமை,
இ.ம.எண்.6/2026
இன்
அ.வ.எண்.240/2015
----

1) நயினார்
2) சுப்பையா (இறப்பு)
3) மாரியம்மாள்
4) சுடலைக்கண்ணன்
5) எம்பெருமாள் ...மனுதார்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

கோமதி ...எதிர்மனுதார்/வாதி

இம்மனுவானது 07.03.2026 அன்று என்முன்பு இறுதிவிசாரணைக்கு வரப்பெற்று மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.இராமசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

**1)** அசல் வழக்கில் கமிஷனர் அவர்களை விசாரிக்க அனுமதி அளிக்க உத்தரவாக வேண்டி இம்மனு பிரிவு 151 சி.பி.சி-யின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்—**

இம்மனுதாரர் அசல் வழக்கில் 5ம்பிரதிவாதி ஆவார், மற்ற பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து அபிடவிட் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் ரிட்டன் ஸ்டேட்மெண்ட்டுடன் 1மதபசில் சொத்தில் வாதி கட்டியுள்ள 2மதபசில் மாடிப்படிகளை அப்புறப்படுத்த கவுண்டர்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.23 16:36:00 +0530

கிளைமுடன் தாக்கல் செய்துள்ளேன். அதனை நிரூபிக்க கமிஷனர் மனு தாக்கல் செய்து, அவர்கள் அறிக்கையில் 2 ம்தபசில் சொத்து சம்பந்தமாக சரியான விவரங்களை குறிப்பிடவில்லை என்று மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளார். அதனை இதன் ஒருபாகமாக பாவித்துக்கொள்ள வேண்டும் என்றும், கமிஷனர் தாக்கல் செய்த அறிக்கையில் அவர்களை விசாரித்து சில முக்கிய விவரங்களை தெளிவுபடுத்த வேண்டியுள்ளது என்றும், கமிஷனர் அறிக்கை சரியான முறையில் இல்லை என்பதை கமிஷனரை விசாரித்தால் தான் நீதிமன்றத்திற்கு எடுத்துக்கூற முடியும் என்றும், ஆகவே வழக்கில் கமிஷனரை விசாரிக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

நீதிமன்ற ஆணையர் தல பார்வை மேற்கொண்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு உபயதரப்பினர்களுக்கும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை சம்பந்தமான சாட்சியங்கள் முன்னிலைப்படுத்த உரிய கால அவகாசம் வழங்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பில் எந்தவித சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தாமல் வழக்கு விசாரணை தொடங்கி பிரதிவாதிகள் தரப்பு சாட்சியை வாதி தரப்பு குறுக்குவிசாரணை முடித்து வைக்கப்பட்ட பின் தற்போது நீதிமன்ற ஆணையரை விசாரிக்க கேட்டு, வழக்கை காலம் கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்திருப்பதால் தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை–</u>**

இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:36:07 +0530

**<u>5) நீதிமன்ற பரிசீலனை–</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் இ.ம.எண்.520/2017 ல் தாக்கல் செய்த வழக்கறிஞர் ஆணையரை பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு எதிர்மனுதாரரால், மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்காக 10 ஆண்டுகள் கடந்த விசாரணை பட்டியலில் இருந்து வரும் வழக்காகும். மனுதாரர்கள் இ.ம.எண்.520/2017 ல் வழக்கறிஞர் ஆணையரால் 26.11.2021 ம் தேதி தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையில் மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் பரிசீலன செய்யப்பட்டு வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, வழக்கில் ஆவணங்களில் ஒன்றாக ஏற்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் பி.சா.1 ஆக சாட்சியம் அளித்து குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் பிரதிவாதியின் கீழ்ப்பக்க சுவற்றில் 2 கொரட்டு கற்களை காண்பிக்கப்படவில்லை என்றும், சர்வே எண்.729/5 அரசு புறம்போக்கு என்பதை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்பதற்காக வழக்கறிஞர் ஆணையரை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய கோரியுள்ளார். அசல் வழககானது மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுளள்து. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகார வழக்கில் தாவா சொத்தினை அனுபவத்திற்கு Incidental title நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எதிர்மனுதாரர்/வாதியை சார்ந்தது. இம்மனுதாரர் பிரதிவாதியாக இருந்து வருவதால் வழக்கறிஞர் ஆணையர் நீதிமன்றத்தின் பிரதிநிதியாக தாவா சொத்தை பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையின் குறைகளை இ.ம.எண்.520/2017 ல் மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:36:13 +0530

தரப்பு விசாரிக்க வேண்டிய சாட்சியத்தை அம்மனு முடிக்கப்பட்டு ஆணையர் அறிக்கை வழக்கு கோப்பின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்ட பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கு கோப்பினை மறுதளிக்க பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக வழக்கறிஞர் ஆணையரை விசாரணை செய்ய கோருவது சட்டப்படியும், நியாயப்படியும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**6) இறுதியாக,** மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 23.03.2026 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.23 16:36:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்–இல்லை.
எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்– இல்லை.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.23 16:36:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மா.உ.நீ., கோவில்பட்டி.
இ.ம.எண்.6/2026
இன்
அ.வ.எண்.240/2015
வரைவு/நேரிய/ உத்தரவு
நாள்–23.03.2026